Government of Western Australia
Mental Health Commission

## பின்வருவனவற்றிற்கு உங்களுக்கு உரிமையுண்டு:

- உங்களது உரிமைகள் மற்றும் நீங்கள் பராமரிக்கும் ஆளின் உரிமைகள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு
- பணியாளர்களால் உங்கள் கருத்துக்களை ஆலோசனை செய்விப்பதற்கு
- தெரிவிக்கப்பட வேண்டிய நிகழ்வுகளைத் அறிவிக்க
- நீங்கள் ஆதரவளிக்கும் ஆளின் பராமரிப்பு, சிகிச்சை பற்றி ஈடுபடவும், தகவலைப் பெற்றுக்கொள்ளவும்
- நீங்கள் ஆதரவளிப்பவர் வெளியேற அனுமதி வழங்கப்பட முன்னர் கலந்தாலோசிக்க
- நீங்கள் ஆதரவளிப்பவர் சார்பாக மேலும் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள
- அந்த நபரின் தொடர்பாடல் சுதந்திரத்திற்கான ஏதாவது மட்டுப்பாடுகள் பற்றிய தகவலைப் பெறுவதற்கு
- பணியாளருடன் அந்தரங்கமாக உரையாட
- உள நல தீர்ப்பாயத்திடம் ஒரு நோயாளரின் கட்டாய நிலைமையின் ஒரு மீளாய்வைக் கோர (தொ: 08 6145 3900)
- உள நல தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பித்தல், அதன் விசாரணை பற்றித் தெரிந்துகொள்ள
- உளநல தீர்ப்பாயத்திற்கு வரும் விடயங்களில் உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க
- உளநல தீர்ப்பாயத்தில் ஒருவருக்காக பிரதிநித்துவம் செய்ய அல்லது பிரதிநிதித்துவம் செய்யப்படுவதற்கு
- தங்களுக்கு அதிருப்பி ஏற்பட்டால், உளநல சேவை அல்லது சுகாதார மற்றும் இயலாமை சேவைகள் முறைப்பாட்டுக் காரியாலயத்திற்கு ஒரு புகாரைச் செய்வதற்கு (HaDSCO) (தொ:1800 813 583)

## மேலும் தகவல்கள்

இந்தப் பிரசுரத்திலுள்ள தகவல்கள் , உள நல சட்டம் 2014 (*Mental Health Act 2014*) இல் வெளியிடப்பட்ட சட்டங்களுடன் தொடர்புடையவை. பின்வரும் ஒரு தொகுதி துண்டுப் பிரசுரங்களில் இந்தச் சட்டத்தைப் பற்றிய தகவல்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது:

- பரிசோதனை ஒன்றிற்காக மனநோய் வைத்தியருக்குச் சிபாரிசு செய்தல்
- தங்கிச் சிகிச்சைபெறும் நோயாளருக்கான வழிமுறைகள்.
- சமூகச் சிகிச்சை வழிமுறைகள்
- தானாக விரும்பி வரும் நோயாளருக்கான தகவல்கள்
- மன வருத்தத்திற்கான மருத்துவத்தைப் பெறுதல்
- தனிப்பட்ட உதவியாளர்களுக்கான தகவல்கள்
- நியமிக்கப்பட்டவர்கள்: நியமனம் செய்வது எவ்வாறு அத்துடன் அதன் அர்த்தம் என்ன.

## ஏனைய பிரசுரங்கள் கிடைக்குமிடம்:

- உள நல நியாய மன்று
- உள நல ஆதரவு சேவை
- உள நல சட்ட நிலையம்

உளநல சட்டம் 2014 பற்றி அதிக தகவல்களுக்கும், ஏனைய வழி வகைகளுக்கும் வருகை தரவும், மன நல ஆணைய இணையத்தளம்: www.wa.gov.au
or phone (08) 6272 1200

This document can be made available in other languages and alternative formats on request.

Published by the Mental Health Commission (2015)

# தனிப்பட்ட உதவியாளர்களுக்கான தகவல்



**நீங்கள், மன நோய்க்கு சிகிச்சைபெறும் ஒருவரின் பராமரிப்பாளர்,நெருங்கிய குடும்ப அங்கத்தவர், பெற்றோர், காவலர் அல்லது நியமிக்கப்பட்ட ஒருவராயின், நீங்கள் ஒரு 'தனிப்பட்ட உதவியாளர்' ஆக இருக்கலாம்.**

**உங்களது உரிமைகள் போன்று உங்களது பங்களிப்பைப் பற்றிய தகவல்களையும் இந்தப் பிரசுரம் வழங்குகிறது.**

## தனிப்பட்ட உதவியாளர் என்பவர் யார்?

நீங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் ஒருவரானால், நோயாளிக்கு நீங்கள் தனிப்பட்ட உதவியாளராகக் கருதப்படுவீர்கள்:

- பராமரிப்பாளர் (பணமில்லாமல் தொடர்ச்சியாக நோயாளருக்குப் பராமரிப்பு வழங்கும் ஒருவர்)
- நெருங்கிய குடும்ப உறுப்பினர் (நோயாளருக்குத் தொடர்ச்சியாகப் பராமரிப்பு வழங்கும் ஓர் உறவினர்)
- குழந்தையின் பெற்றார் அல்லது பாதுகாவலர்
- பாதுகாவலர் அல்லது வயதான ஒருவரின் நீண்ட நாள் பாதுகாவலர்
- தேர்ந்தெடுக்கப்பட்டவர் (படிவம் 12ஏ யினை உபயோகித்து வழமையாக நோயாளரால் நியமிக்கப்படுபவர்)

## உங்களது பங்களிப்பு என்ன?

பின்வருவன அடங்கலாக, நீங்கள் ஆதரவளிக்கின்றவரின் சிகிச்சையிலும் , கவனிப்பிலும் ஈடுபாடு கொள்ளத் தகுதி உடையவராவீர்கள்:

- சிகிச்சை, பராமரிப்புக்கான தெரிவுகளை ஆலோசித்தல்
- அவருக்கு ஆதரவு வழங்குதல், மற்றும்
- சிகிச்சை, ஆதரவு அத்துடன் வெளியேறும் திட்டத்தினைத் தயாரித்தல், அதனை மீளாய்வு செய்யதல்.

நீங்கள் எவ்வளவு தூரம் ஈடுபாடு கொள்ள விரும்புவீர்கள் என்பதனைப் பணியாளருக்குத் தெரியப்படுத்தலாம்.

அந்த நபருக்கு ஆதரவு வழங்கும்போது, உள நலப் பணியாளர்களின் அனுபவம், நிபுணத்துவம் ஆகியவற்றை மதிப்பது முக்கியமானதாகும். நோயாளர் மற்றும் பணியாளர் இருசாரரிடமிருந்தும் நன்கு தகவலைப் பெற்றுக்கொண்டவராக உதவியாளர்கள் இருக்கவேண்டும் அப்போது சமநிலையான முடிவை எட்ட முடியும்.

## என்ன தகவலை நீங்கள் பெறுவீர்கள்?

நீங்கள் ஒரு தனிப்பட்ட உதவியாளராக இருப்பதால், ஆதரிப்பவரைப்பற்றிய பின்வரும் தகவல்களுக்கு நீங்கள் தகுதியுடையவராவீர்கள்:

- அவர்களுக்குச் சிகிச்சை வழங்கப்படும் மனநோய், சிகிச்சைக்கான தெரிவுகள், வழங்கப்பட்ட ஏதாவது சிகிச்சைக்கு அவர்களின் பிரதிபலன்கள்.
- தங்கியிருந்து சிகிச்சைபெறுவதற்கான உத்தரவு அல்லது சமூகச் சிகிச்சை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கான காரணிகள்.
- தனிமைப்படுத்தல் அல்லது உடல் மட்டுப்பாடுகளை உபயோகிக்கப்பட்ட ஏதாவது நிலைவரம், அத்துடன்
- அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யப் போதிய சேவைகள் கிடைப்பது

இத் தகவல்களைத் தருவதற்காக உங்களுடன் அல்லது ஏனைய தனிப்பட்ட உதவியாளருடன் தொடர்புகொள்ளப் பணியாளர்கள் கணிசமான அளவு முயற்சி எடுப்பார்கள். நீங்கள் பராமரிக்கும் ஆள், பல்வேறு பராமரிப்பாளர்களையும், வேறு தனிப்பட்ட உதவியாளர்களையும் வைத்திருந்தால், அவர்களில் ஒருவருக்கு அந்தத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

## எப்போது உங்களுக்கு அறிவிக்காமல் அல்லது உங்களை ஈடுபடுத்தாமல் விடக்கூடும்?

பொதுவாக, தமது தனிப்பட்ட உதவியாளர்களுக்கு அறிவிக்கவும் அவர்களை ஈடுபடுத்தவும் இணங்குவதோ, இல்லையோ என ஒரு தன் விருப்பத்துடன் வரும் நோயாளர் தீர்மானிக்கலாம். எவ்வாறாயினும், இந்த முடிவினை எடுப்பதற்கு தானாக விரும்பிவரும் நோயாளருக்கு நன்கு போதிய திறமை இல்லாவிட்டால், அந்த நபரின் நன்மைக்காக இல்லாவிட்டாலன்றி, உங்களுக்கு அறியத்தரப்படும்/நீங்கள் ஈடுபடுத்தப் படுவீர்கள். அநேகமானோரைப் பொறுத்தவரையில், பணிப்பாளர்கள் கட்டாய நோயாளரின் தனிப்பட்ட உதவியாளருக்கு அறிவித்து, அவர்களை ஈடுபடுத்துவார்கள்.

இதன் விதிவிலக்குகள் ஆவன:

இது கட்டாய நோயாளரின் சிறந்த நன்மைக்காக இல்லாதிருந்தால், அல்லது உங்களுக்கு அறிவிப்பதற்கோ அல்லது உங்களை ஈடுபடுத்துவதற்கோ கட்டாய நோயாளர் சம்மதிக்காவிட்டால், அத்துடன் நியாயமான ஒரு முடிவினை அவர்களால் எடுக்கக்கூடியதாக இருப்பதை மன நோய் மருத்துவர் தீர்மானிப்பார்.

## குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்

தகவல் பெற / ஈடுபடுத்த உள்ள உங்கள் ஏனைய உரிமைகளுக்கு மேலதிகமாக, நீங்கள் ஆதரிக்கும் ஆளுக்கு நடக்கும் பின்வரும் 'குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்' இல் ஏதாவது ஒன்று இடம்பெறும் ஒவ்வொரு தடவையும் ஆகக் குறைந்தது ஒரு தனிப்பட்ட உதவியாளருக்காவது அறியத்தர வேண்டும்.

- ஒரு தடை ஆணை, தங்கிச் சிகிச்சைபெறும் விதிமுறை அல்லது சமூகச் சிகிச்சை விதிமுறை உருவாக்கப்படுவதை, அகற்றப்படுவதை( இல்லாமல் செய்யப்படுதை) அல்லது காலாவதியாதல்
- ஒரு மன நோய் மருத்துவரின் பரிசோதனையைத் தொடர்ந்து பிறப்பிக்கப்படும் எந்தவொரு உத்தரவையும்
- தடுப்பிலிருந்து அவர்கள் விடுவிக்கப்படுதல்
- போக்குவரத்து விதிமுறை மேற்கொள்ளப்படுதல்
- ஒரு வைத்தியசாலையிலிருந்து இன்னொரு வைத்தியசாலைக்கு அவர்களை இடம்மாற்றுதல்
- அனுமதி இல்லாமல் சமூகமளிக்காமல் விடல், வைத்தியசாலை விடுப்புக்கான அனுமதி வழங்கல் அல்லது விடுப்புக்காலம் நீடிக்கப்படல், மாற்றுதல் அல்லது இரத்துச்செய்யப்படுதல்.
- வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் விதிமுறையில் அவசர மனநோய்க்கல்லாத சிகிச்சை அவர்களுக்கு வழங்கப்படுதல்.

நீங்கள் ஆதரவளிக்கும் நபர் விரும்பாது விட்டாலும், இந்த நிகழ்வுகள் பற்றி உங்களுக்கு (அல்லது வேறொரு உதவியாளருக்கு) அறிவிக்கப்படும். அந்த நபரின் மேலான நன்மைக்காக இது இல்லாத, அல்லது பணியாளர்கள் முயற்சிகள் மேற்கொண்டிருந்தும், ஒருவருடனும் தொடர்புகொள்ள முடியாத வேளைகள் மாத்திரமே இதற்கான விதிவிலக்குகளாகும்.